ஒற்றுமையின் முகவரி சுரண்டை

தென்றல் தழுவும் சுந்தர நிலமே,
இயற்கை அன்னை தாலாட்டும் எங்கள் சுரண்டை நகரமே!

மதங்கள் கடந்த மனிதநேயம் வாழும் சொந்த ஊரு,
ஒற்றுமைக்கு இலக்கணம் சொல்லும் மக்கள் கூரு!

உழைப்பில் என்றும் சளைக்காத கம்பீரமான ஊரு,
எங்கள் சுரண்டை மண்ணுக்கு ஈடே இல்லை பாரு!

ஒன்றுக இணைந்து வாழும் மக்கள் சோலை,
ஒற்றுமையின் முகவரியாய் ஒளிரும் சுரண்டை எல்லை!

தலைமுறை கடந்து வாழும் பாசப் பிணைப்பின் சொந்தம்,
சுரண்டை மண்ணில் பூத்திருக்கும் மனிதநேய பந்தம்!

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையே எங்கள் பெரிய பலம்,
வேற்றுமை இல்லா வாழ்வே எங்கள் ஊரின் வளம்!

சுரண்டை மண்ணில் பிறந்ததே நாங்கள் செய்த தவம்,
எங்கள் ஊரின் ஒற்றுமையே எங்களுக்கு என்றும் வரம்!